<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>
<u>அசல் வழக்கு எண்</u>.224/2022

பெயர்-திரு.தேவராஜ் நாள்.14.07.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. எனது தகப்பனார் பெயர் நம்பியான். எனது தகப்பன் வழி தாத்தாவின் அப்பா பெயரும் நம்பியா கவுண்டர் என்றால் சரிதான். எனது தாத்தாவின் அப்பா நம்பியா கவுண்டருக்கு 3 மகன் என்றால் சரிதான். அவர்கள் பெயர்கள் 1.நம்பியா கவுண்டர், 2. வெள்ளையா கவுண்டர். 3. மலையா கவுண்டர் என்றால் சரிதான். வெள்ளையா கவுண்டரின் மகன்கள் எனது அப்பா நம்பியான், எனது பெரியப்பா பூச்சியப்பா என்றால் சரிதான். மலையா கவுண்டருக்கு ஒரு மகள் அண்ணாமலையச்சி என்றால் சரிதான்.அண்ணாமலையச்சி வாரிசுகள் பிரதிவாதிகள் மற்றும் தங்கமணி, குப்புசாமி என்றால் தங்கமணியை தவிர மற்றவர் வாரிசுகள் தான். தாவா சொத்தின் சர்வே எண்.1702, 1704 ஆகும். 1702 உடைய பழைய சர்வே எண்.331 என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 1704 உடைய பழைய சர்வே எண்.330 என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தாவா சொத்து எனது அப்பா நம்பியான் 28.03.2022 ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். தாவா சொத்தை தவிர வேறு சொத்துகள் மேற்படி கிராமத்தில் உள்ளதா என்றால் உள்ளது. அதன் சர்வே எண் என்ன என்றால் 1561 ல் 12 ஏக்கர்உள்ளது. அதில் நான் அனுபவத்தில் இல்லை எனது அப்பா அனுபவத்தில் இருந்தார். சர்வே எண்.1561 ல் தொடர்புடைய ஆவணங்கள் என்னிடம் உள்ளது அதை தாக்கல் செய்ய முடியும். எனது தாத்தா பெயரில் உள்ள பட்டாதான் என் வசம் உள்ளது. 12 ஏக்கரில் 3 ஏக்கர் எனது அப்பாவிற்கு உரிமையுள்ளது. அந்த 12 ஏக்கரில் பிரிக்காமல் அனுபவித்து வருகிறோம். தற்போது அந்த சொத்தில் 3 ஏக்கர் எனது அப்பா அனுபவித்து வருகிறார். அந்த 3 ஏக்கர் நான்கு எல்லை என்ன என்றால் தெற்கு முனுசாமியிடமும், வடக்கே குப்புசாமி பூமியும், கிழக்கே 1 ம் பிரதிவாதி பெருமாள் பூமியும், மேற்கே முனுசாமி பூமியும் உள்ளது. கிழக்கே 1 ம் பிரதிவாதி

பெருமாள் பூமி அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்று எனக்கு தெரியாது. புல எண்.1704 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது. 20 ஆண்டுகளாக 2 ஏக்கர் 80 செண்ட் 1, 2 பிரதிவாதி வசம் உள்ளது. அதை மீட்டு தர கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புல எண்.1704 ன் சொத்திற்கு வடக்கே வாரியும், தெற்கு வாரியும், கிழக்கே பள்ளம், மேற்கே மாக்கம்பாளையம் ரோடு உள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் மற்றும் தங்கமணி, குப்புசாமி ஆகியோர்கள் சேர்ந்து புல எண்.1704 யை பொறுத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு எனது பெரிய தாத்தா , நம்பியா கவுண்டர் எனது தந்தை நம்பியான, எனது பெரியாப்பா வெள்ளையனின் வாரிசுகளுக்கு எதிராக மாண்புமிகு சார்பு நீதிமன்றம் சத்தியமங்கலத்தில் அசல் வழக்கு எண்.87/2022 என தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் (சாட்சி தற்போது தெரியாது என மீண்டும் தானே பதிலளித்தார்)

2. அந்த வழக்கு தாக்கல் செய்யும் விவரம் தெரிந்துதான் எனது அப்பா, எனக்கு சர்வே எண்.1704 சொத்தை செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் முன்பே எழுதிக் கொடுத்துவிட்டார். எனது செட்டில்மெண்ட ஆவணத்தில் மூல ஆவணமாக என்ன ஆவணம் காட்டப்பட்டுள்ளது என்றால், தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் எனது அப்பா எனக்கு எழுதிக் கொடுத்த பத்திரமா செட்டில்மெண்ட பத்திரம் என்றால், சரிதான். எனது தகப்பனாருக்கு சர்வே எண்.1704 பட்டா எண்.3733 என கண்டுள்ளது சரியா என்றால், எனது அப்பாவிற்கு தனி பட்டா இல்லை. என்னுடைய செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்னிட்டு சர்வே எண்.1704 ல் உள்ள சொத்தை காலிசெய்து கொடுக்குமாறு பிரதிவாதிகளிடம் கேட்டேன். அவர்கள் கொடுக்க மறுத்ததால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். சர்வே எண்.1702 நான்தான் அனுபவித்து வருகிறேன். பிரதிவாதிகள் சர்வே எண்.1702-ல் அனுபவத்தில் இடைஞ்சல் செய்தார்களா என்றால், இல்லை. இடைஞ்சல் செய்ததாக சொல்லி, வழக்குரையிலும், பிரமாணப் பத்திரிக்கையிலும் சொல்லியிருந்தால், தவறானது என்றால் சரிதான். சர்வே எண்.1561 எனது தகப்பனாரின் அனுபவத்தில் உள்ள சொத்தை மலையா கவுண்டருக்கு எனது தகப்பனாரும் எனது பெரியப்பா வெள்ளையகவுண்டர் ஆவணம் செய்து கொடுத்துள்ளார்களா என்றால், தெரியாது. சர்வே எண்.1561-ல் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருக்கிறார்களா என்றால்,

இல்லை. சர்வே எண்.1561 பொறுத்து பிரதிவாதிகளுக்கு ஆவணங்கள் எழுதப்பட்டுள்ளதா என்றால், தெரியாது.

3. மாண்பமை சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலத்தில் உள்ள வழக்கு பற்றி தற்போதுதான் எனக்கு தெரியும். எதிர்வழக்குரையைப் பற்றி படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரியும். எனக்கும், எனது அப்பா, பெரியப்பாவின் வாரிசுகளிடம் நல்ல பேச்சு வார்த்தையில் இருக்கிறேனா என்றால், இருக்கிறேன். சர்வே எண்.1561-ல் எதாவது சொத்தை எழுதிக் கொடுத்தள்ளார்களா என எனது தகப்பானரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை. மாண்பமை சார்பு நீதிமன்றம் வழக்கில் நான்தான் எனது தகப்பனாருக்கு வழக்கறிஞரை நியமித்து கொடுத்தேனா என்றால் சரியல்ல. நான் எனது தகப்பனாருடன் ஒரே குடும்பமாக இருக்கிறேன். நான்தான் அந்த வழக்கை எனது அப்பாவிற்காக நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. சர்வே எண்.1704 அதன் ப.க.ச.எண்.330-ல் குறிப்பிட்ட செக்குபந்தி கண்டு பு.ஏ.2.00 சொத்தை எனது தகப்பனார் நம்பியான், அவரது சகோதரர்கள் சேர்ந்து பிரதிவாதிகளின் தாத்தா மலையாக்கவுண்டருக்கு கடந்த 28.04.1975-ல் கிரையம் மற்றும் சுவாதீனம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால், அதுபற்றி தெரியாது. மேற்படி ஆவணத்தில் சர்வே எண் பிழையாக எழுதப்பட்டுள்ளதை நாங்கள் சாதகமாக கொண்டு, கிரையம் கொடுக்கவில்லை என பொய்யாக சொல்லி வருகிறோம் என்றால் சரியல்ல.

4. மேற்படி, சொத்தை மேற்படி ஆவணத்தின் அடிப்படையில்தான் பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், கடந்த 20 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார்கள். அதற்கு முன்பு உள்ள விவரம் எனக்கு தெரியாது. மலையாக்கவுண்டர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவருடைய மகள் அண்ணாமலையச்சிக்கு 15.06.1994-ல் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. அதன்படி அண்ணாமலையச்சி அந்த சொத்தை அனுபவித்து வந்தார் என்றால், தெரியாது. அண்ணாமலையச்சி இறந்தபிறகு அவரது வாரிசுகளான பிரதிவாதிகள் அந்த சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால், எனக்கு தெரியாது. 1975 கிரையத்திற்கு பின்னிட்டு எனது தகப்பனாருக்கோ, வெள்ளையகவுண்டருக்கோ சர்வே எண்.1704 ஐ பொறுத்து எந்த உரிமையும் இல்லை என்றாலும், சர்வே எண்ணில் பிழைஇருப்பதை சாதகமாக கொண்டு மோசடியாக செட்டில்மெண்ட் ஆவணம் எனது பெயருக்கு ஏற்படுத்தப்பட்டள்ளது

என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் படி எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.07.14 16:15:49 +0530

District Munsif